விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 04 சனிக்கிழமை (18.05.2002) தொலைபேசி 3378 ஒலி 150

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளுக்கு
நியூ நகுலா ஜூ வல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### ஹெல்ஹீசன், எரிக்-பாலா அடுத்தவாரம் லண்டனில் சந்திப்பு

# புரிந்துணர்வு ஒப்பந்த நடைமுறைச் சிக்கல்

# தாய்லாந்து பேச்சுவார்த்தை தாமதமாகும்?

## நோர்வே ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

**அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்ஹீசன், சிறப்புத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் ஆகிய இருவரும் அடுத்த வாரமளவில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக நோர்வேயின் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு 90 நாட்களை எட்டிப்பிடித்துவரும் வேளையிலும் புரிந்துணர்வு உடன்படிக்கையினை அமுல்படுத்துவதில் இணக்கம் காணப்பட்ட விடயங்களில் இதுவரை நிறைவேற்றப்படாத நிலையிலும் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் நோர்வேயின் ...

(08ம் பக்கம் பார்க்க)

### புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்

# தென்னிலங்கையில் குற்றச்செயல்கள் பெருமளவில் குறைந்துள்ளன

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட பின் தென்னிலங்கையில் குற்றச் செயல்கள் பெருமளவில் குறைந்துள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையினால் சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தென் பகுதியில் கூடுதல் பொலிஸாரை சேவையில் அமர்த்தி ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.இதன் காரணமாக குற்றச் செயல்கள் அங்கு குறைந்துள்ளது.

கொழும்பு வீதிகளில் மீண்டும் வீதித் தடைகள், சோதனைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதையிட்டு எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. வன்செயல்களில் ஈடுபடுபவர்களின் ஊடுருவலைத் தடுப்பதற்காகவே வீதித்

(08ம் பக்கம் பார்க்க)

### காஷ்மீர் பிரச்சினை

# இந்தியா - பாகிஸ்தான் யுத்தம் வெடிக்கும் அபாயம்

(புதுடில்லி)

இந்தியாவின் காஷ்மீர் எல்லைப் பகுதியில் இந்திய ராணுவத்துக்கும் பாகிஸ்தான் இராணுவத்துக்குமிடையே கடுமையான ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை திடீரென பாகிஸ்தானியத் துருப்பினர் காஷ்மீர் எல்லைப் பகுதிகள் மீது பீரங்கித் தாக்குதலை ஆரம்பித்தனர். இதனை அடுத்து இந்திய இராணுவத்தினருக்கும் பாகிஸ்தானிய துருப்பினருக்கும் இடையே கடுமையான மோதல்கள் மூண்டுள்ளன.

இந்தச் சம்பவத்தை அடுத்து அப்பகுதிகளுக்கு மேலதிக இந்தியப்படையினர் விரைந்துள்ளதுடன் இருநாட்டுப் படையினரும் பரஸ்பரம் தொடர்ச்சியான கடுமையான பீரங்கித் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தத் தாக்குதல்களை அடுத்து காஷ்மீர் எல்லைப் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து வருவதாகவும் இத்தாக்குதலில் 2பேர் கொல்லப்பட்டதுடன் 6 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(08ம் பக்கம் பார்க்க)

# லெபனான் சிறையில் உள்ள பெண்களை விடுவிக்க ஏற்பாடு

(கொழும்பு)

லெபனானில் தொழில் வாய்ப்பு பெறும் நோக்கத்துடன் அங்கு சென்ற இலங்கையை சேர்ந்த இளம் பெண்களை பல்வேறு குற்றங்களுக்காக கைது செய்து சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெண்கள் தமிழ், சிங்கள, முஸ்லீம் இனங்களைச் சேர்ந்தவர்களாவர்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள இளம்பெண்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை இலங்கைக்கு திருப்பி அழைப்பதற்கு தொழில் வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்கா ஏற்பாடுகளை செய்து வருவதாக தொழில் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

### நிரந்தர சமாதானம் ஏற்படாதவரை

# பொது இடங்களில் இருந்து படையினர்

# காலை 8 முதல் மாலை 5 வரை

## வாபஸ் பெறப்படமாட்டார்கள்

### மட்டு. சிவில் இணைப்பதிகாரி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை அரச, தனியார் மற்றும் பொதுக் கட்டடங்களில் நிலை கொண்டுள்ள படையினர் வாபஸ் பெறப்படமாட்டார்கள் என மட்டக்களப்பு மாவட்டத்தின் 23வது படைப் பிரிவின் சிவில் இணைப்பதிகாரி லெப்டினன் கேணல் எம்.ஜி.குணசேகரா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படை முகாம்கள் இயங்கிவரும் அரச, தனியார் பொது கட்டடங்களின் உரிமையாளர்களை அழைத்து நேற்று நடத்திய ஆலோசனைக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபைக் கட்டடத்தில் இயங்கும் 23வது படைப பிரிவின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

நிரந்தர சமாதானம் ஏற்படும் வரையில் இராணுவம் தனது ஸ்திரத் தன்மையை பேண வேண்டிய நிலையில் உள்ளது. இதனால் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பின்னரே இராணுவத்தினரின் பாவனையிலுள்ள கட்டடங்கள் உரியவர்களிடம் மீள ஒப்படைக்கப்படும்.

(08ம் பக்கம் பார்க்க)

## காலை 8 முதல் மாலை 5 வரை யாழ். கண்டி வீதி திறந்திருக்கும்

### படைத்தரப்பு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்- கண்டி வீதி காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை பயணிகள் போக்குவரத்திறகாக திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்று பலாலி இராணுவ முகாமின் ஊடகப்பிரிவு நேற்று அறிவித்துள்ளது.

பயணிகள் போக்குவரத்திற்காக யாழ் கண்டி வீதி ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 6 மணி முதல் மாலை 5 மணிவரை திறக்கப்பட்டிருக்கும் என்று பலாலி ஊடகப்பிரிவு கடந்த 15ம் திகதி அறிவித்திருந்தது.

தற்பொழுது அதனை நடைமுறைப்படுத்துவதில் அசௌகரியம்

(08ம் பக்கம் பார்க்க)

#### வெசாக் தினத்தை முன்னிட்டு

## ஆயிரம் கைதிகளுக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் வெசாக் தினத்தை முன்னிட்டு சுமார் ஆயிரம் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழுங்குவதற்கான நடவடிக்கைகளை உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா எடுத்துள்ளார்.

பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டுள்ள கைதிகள் அனைவரும் சிறு சிறு குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் பொது மன்னிப்பு தொடர்பாக ஆயிரம் பேர் கொண்ட சிறைக் கைதிகளின் பட்டியல் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அனுமதிக்காக சிபார்சு செய்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.(ம)

## சமாதான முயற்சிகள் குழம்பினால் நாட்டை அழிவில் இருந்து மீட்க முடியாது!

### அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

(காலி)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்கைகளின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் குழம்பிவிடக் கூடாது. சமாதான முயற்சிகள் குழப்பப்பட்டு மீண்டும் ஒரு யுத்தம் வெடிக்குமானால் இந்த நாட்டை அழிவிலிருந்து மீட்பது கடினம்.

இவ்வாறு தொலைத்தொடர்பு ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் தெரிவித்துள்ளார்.

காலியிலுள்ள பிரதம தபாற் கந்தோரில்தொழில் நுட்ப வசதிகளை நேற்று ஆரம்பித்து வைத்து அமைச்சர் உரையாற்றினார். அங்கு அமைச்சர் இந்தியாஸ் பாக்கீர் மாக்கார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்

(08ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளர்பரம்

### (O.L) கணிதம்

கட்டாயபாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 37 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் A பெறுபேறடைவதற்குக் கற்பிக்கப்படும். சந்திக்கும் நேரம் காலை 6.00-9.00 க. ஆறுமுகநாதன் 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (5318)

### வகுப்புகள்

ஆண்டு 6-11 வரையான பாடங்கள் ஆரம்பமாகியுள்ளன. ஒவ்வொரு வகுப்பிலும் கூடியது 15 மாணவர்கள் தனித்தனி கவனம், அனுமதிக்கு தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரன், ஆச்சாரி 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (5062)

## ஆசிரிய ஆலோசகர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சகலஆசிரிய ஆலோசகர்களுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் திங்கட்கிழமை பி.ப1மணிக்குயாழ் வலய கல்வித்திணைக்களத்தில்நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (த)

## தையல் தட்டச்சு பயிற்சி நெறிகள்

(ஈச்சமோட்டை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றயாழ். மாவட்ட அலுவலகத்தினரால் இளைஞர், யுவதிகளுக்கான தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) மற்றும் தையல் பயிற்சி நெறிகள் எதிர்வரும் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆறு மாதங்களைக் கொண்ட இப் பயிற்சி நெறிகளில் தட்டச்சுப் பயிற்சி நெறி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட அலுவலக பயிற்சிக்கூடம் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச சம்மேளன பயிற்சி நிலையங்களிலும்

தையல் பயிற்சி வகுப்புகள் பருத்தித்துறை பயிற்சி நிலையத்திலும் நடைபெறவுள்ளன.

இவற்றில் இணைந்து பயிற்சி பெற விரும்புவோர் இம்மாத இறுதிக்குள் தமது விண்ணப்பங்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட அலுவலகம், கரவெட்டி பிரதேச இளைஞர்கழக சம்மேளனம், பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஆகியவற்றில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-59)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபாலகத்தில் பிரதம தபாலதிபராகக் கடமையாற்றிய எஸ். மார்க்கண்டர் பிராந்திய நிர்வாக உத்தியோகத்தராக பதவி உயர்வு வழங்கப்பட்டு தற்போது யாழ். நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகத்தில் கடமையாற்றி வருகிறார்.

இவரின் இடத்திற்குப் பிரதிப் பிரதம தபாலதிபராக கடமையாற்றிய எஸ். ஞானசீலன் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-2)

## 4வது ஆண்டு நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர முன்னாள் முதல்வர் திருமதி சரோஜினி யோகேஸ்வரனின் நான்காவது நினைவு தின நிகழ்வு நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். தலைமைச் செயலகத்தில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந. இரவிராஜ் தலைமையில் இடம் பெற்றது. உ)

## 7பவுண் தாலிக்கொடி திருடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளத்திற்கு அண்மையில் உள்ள வீடொன்றில் கடந்த புதன்கிழமை திருடர்கள் 7பவுண் தாலிக்கொடிஒன்றை திருடிச் சென்றுள்ளனர்.

மிருசுவிலில் இருந்து இடம் பெயர்ந்து மேற்படிஇடத்தில் வசிக்கும் குருநாதன் கமலா தேவியின் தாலிக்கொடியே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

சம்பவம்பற்றி தெரியவருவதாவது

அதிகாலை3மணிக்குபுகுந்த திருடர்கள் கழுத்திலிருந்த தாலிக்கொடியை வெட்டி எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# ஊழியர் மறியல் போராட்டத்திற்கு ஆதரவுவழங்கியவர்களுக்குநன்றிகள்

### லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிலாளர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமது மறியல் போராட்டத்துக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கைத்தொழில் பொதுத்தொழிலாளர் சங்க லங்காசீமெந்து நிறுவனக் கிளையினர் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிலாளராகிய நாம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து 26. 03. 2002 இருந்து தொடர்ந்து 52 நாட்களாக லங்கா சீமெந்து லிமிட்டெட், இணுவில் காரியாலயம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தோம். தொடர்ந்து நடைபெற்ற எமது போராட்டம் வடபகுதியில் உள்ள பல தொழிற்சங்கங்களினதும் பொது அமைப்புகளினதும் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு அவர்களின் அனுதாபத்தையும், ஆதரவையும் பெற்றிருந்தது. இதன் பிரதிபலிப்பாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் அவர்கள் லங்கா சீமெந்து லிமிட்டெட் தலைமைக் காரியாலயத்தில், தொழிற்சாலைத் தலைவர் அணில் கொஸ்வத்தவுடன் தொடர்பு கொண்டு சுய விருப்பத்தில் ஓய்வு பெறும் திட்டத்தில் விண்ணப்பிக்காத தொழிலாளருக்கு லங்கா சீமெந்து லிமிட்டெட் காரியாலயம் இணுவிலில் வரவுப் பதிவேட்டில் கையொப்பம் இடுவதற்கான அனுமதி பெறப்பட்டது. மேற்படி நடவடிக்கையானது தொழிற்சாலைத் தலைவர் அணில்கொஸ்வத்த அவர்களால் பகுதிப் பொறுப்பதிகாரி இ. செல்வநாயகம் அவர்களுக்கு கௌரவபாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் அவர்களின் காரியாலயத்தில் அவர்களின் முன்னிலையில், மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் முன்னிலையில் தொலைபேசி ஊடாக பணிக்கப்பட்டது இதன்பிரகாரம் 16.05.2002 பிற்பகல் கௌரவப் பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் முன்னிலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் இணுவில் காரியாலயத்தில் வரவுப்பதிவேட்டில்கையொப்பம் இட்டனர்.

எமது போராட்டம் சார்பாக பல வழிகளிலும் ஆதரவு தந்த அனைவருக்கும் எமது தொழிற்சங்கம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அரச செய்தி ஊடகங்கள் தேர்தல்நியமத்துக்குஅமைய நடப்பதாக மன்றில் உறுதி

(கொழும்)

அடுத்துவரும் தேர்தல்களின் போது தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிக்கும் ஆலோசனைகள் பிரமாணங்கள் என்பவற்றிற்குஅமைவாக நடந்துகொள்வதாக அரசாங்கஊடக நிறுவனங்கள் உயர்நீதிமன்றத்தில் உறுதிஅளித்துள்ளன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் லேக்கவுஸ்நிறுவனம் என்பனவற்றிற்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தாக்கல்செய்த மனுமீதான விசாரணை நேற்று இடம்பெற்ற போதே இவ்வாறு உறுதி அளிக்கப்பட்டது.

இந்தநிறுவனங்களின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி இவ் உறுதி மொழியை வழங்கினார்.

கடந்த பொதுத்தேர்தல் தினத்தின்போது பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு பக்கச் சார்பாக ஊடகங்கள் நடந்து கொண்டதாக கருஜெயசூரியா தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

இவ்மனுவை எதிர்வரும் யூலை1ம்திகதி மீள்பரிசீலனை செய்யுமாறும் நீதிமன்றுஉத்தரவிட்டுள்ளது. (இ-5)

## இராசி பலன்

18 - 05 -2002

வைகாசி 4 சனிக்கிழமை

சஷ்டி பி.ப1.50

பூசம் பி.ப 3.56

இராகுகாலம் 8.53- 10.23

சுபநேரம் 2.53- 4.23

சஷ்டி விரதம்

**மேடம்**

காரியம் கைகூடும், தெய்வ சிந்தை, உறவினர் சந்திப்பு, விடாமுயற்சி.

**இடபம்**

தொழில் நட்டம், முயற்சி மந்தம், மனக்கிலேசம் போசனசுகம்,

**மிதுனம்**

உறவினர் வருகை, காரிய வெற்றி, சயனசுகக்குறைவு

**கடகம்**

சுகக்குறைவு, அதிகாரம், புதியதொழில்முயற்சி, பிரயாணம்.

**சிங்கம்**

பணவரவு, காரிய வெற்றி உறவினரால் லாபம், சந்தோசமான நிகழ்வு.

**கன்னி**

முயற்சி கைகூடும், நண்பர்கள் உதவி, உடல் சோர்வு. கடின உழைப்பு.

**துலாம்**

தொழில் முன்னேற்றம் மனஇறுக்கம், உடல்உபாதை நிலைமாற்றம்.

**விருச்சிகம்**

வீண் அலைச்சல், காரிய வெற்றி, பெரியோர் ஆசி.

**தனுசு**

தனவரவு, காரிய வெற்றி, பிரயாணம், உடல் அசதி.

**மகரம்**

முயற்சி கைகூடும், மனமகிழ்ச்சி, நண்பர்கள் உதவி, உறவினர்கள் சந்திப்பு.

**கும்பம்**

வியாபாரத்தில் புதிய ஈடுபாடு உடல் சோர்வு, பொருள் வரவு, கடின உழைப்பு.

**மீனம்**

கௌரவக் குறைவான சம்பவம், முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## தென்னிலங்கை வர்த்தகக் குழுவினரால் யாழ். வர்த்தகசங்கத்திற்கு தொலைநகல் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகைதந்த தென்னிலங்கை வர்த்தகக்குழுவினர் யாழ்வர்த்தக சங்கத்திற்கு தொலைநகல்(பக்ஸ்) ஒன்றை வழங்கியுள்ளனர்.

ஆர்.ஜெயசேகரன் தலைமையில் வருகைதந்த இக்குழுவினர் யாழ்வர்த்தக சங்கப் பிரதிநிதிகளை அவர்களது அலுவலகத்தில் நேற்றுக் காலை 10மணியளவில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த வர்த்தகக்குழுவினருடன் வருகைதந்த பிரதம பொறியியலாளர் திலக் செனவிரத்னாஇந்த தொலைநகல் இயந்திரத்தை வழங்கினார். (த)

## குடாநாட்டுக்குவேண்டிய முத்திரைகள் தரைவழிப் பாதையூடாக எடுத்துவருகை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டுக்குத் தேவையான முத்திரைகள்நேற்று முன்தினம் முதல்தரைவழிப் பாதையூடாக எடுத்துவரப்படுகின்றன.

கடந்த1995ம்ஆண்டின்பின்னர் குடாநாட்டிற்கு வேண்டிய முத்திரைகள் விமானம் மற்றும் கடற் கப்பல் மூலமாக எடுத்துவரப்பட்டது,

இதனால் விமானம்மற்றும் கடல்போக்குவரத்தில் தடங்கல்கள் ஏற்படும்பட்சத்தில் குடாநாட்டில் அடிக்கடிமுத்திரைத் தட்டுப்பாடு ஏற்பட்டு வந்தது.

தற்போது ஏ9தரைவழிப் பாதை பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் தபால் திணைக்கள வாகனத்தில் குடாநாட்டிற்கு வேண்டிய 22முத்திரைப்பொதிகள் தலைமைக் காரியாலயத்தில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

தொடர்ந்து தரைவழிப்பாதை யூடாகவேமுத்திரைகள் எடுத்துவரப்படவுள்ளதாக தபாலகவட்டாரங்கள் தெரிவித்தன- (இ2)

## சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக வடக்கு கிழக்கிலுள்ள விடுதிகள் புனரமைப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள ஹொட்டல்களை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை ஹொட்டல் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அதன் தலைவர் பி. பிறணசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது அப்பிரதேசங்களிலுள்ள வளங்களையும் வசதிகளையும், அடிப்படையாகக் கொண்டே இக் ஹொட்டல்கள் யாவும் புனரமைப்பு செய்யப்படும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதை அடுத்து நாட்டின் நாலா புறங்களிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் உட்பட வர்த்தகப் பிரமுகர்கள் பலரும் வடக்கு கிழக்கிற்கு படையெடுத்து வருவதும் தெரிந்ததே.

யாழ். நகரப்பகுதியை அண்டிய பிரபல ஹொட்டல்களில் இராணுவத்தினர் தங்கியிருப்பதனால் யாழ்ப்பாணம் வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குமிடவசதியின்றி பெரும் சிரமத்திற்குள்ளாகி வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பட்மின்ரன் சுற்றுப் போட்டி

(ஆனைக்கோட்டை)

யாழ். பல்கலைக்கழக உள்ளக பீடங்களுக்கிடையிலான பெண்கள் பட்மின்ரன் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் பல்கலைக்கழக மாணவர் கட்டடத்திலுள்ள பட்மின்ரன் மைதானத்தில்நடைபெறவுள்ளது. (த)

## கரப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று இரவு 7.00 மணிக்கு மின் ஒளியில் இடம் பெறவுள்ளது.

பெண்கள் அணியில் மல்லாகம் ஆர்.டி.எஸ் விளையாட்டுக் கழகம் எதிர் காங்கேசன் துறை கே.கே.எஸ் விளையாட்டுக் கழகமும் ஆண்கள் அணியில் காங்கேசன்துறை கே.கே.எஸ் விளையாட்டுக்கழகம் எதிர் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டு மைதானத்தில் இப் போட்டிகள் நடைபெறவுள்ளன. (உ-12)

## பொதுக் கூட்டம்

(நெல்லியடி)

நெல்லியடிவணிகர்கழகஅங்கத்தவருக்கான பொதுக் கூட்டம்இன்றுபி.ப.2.30மணிக்கு கரவெட்டி திரு இருதயகல்லூரியில் இடம் பெறவுள்ளது. (உ-247)

# பிரிவினை அரசியலின்றும் விலகி பொதுவான இணக்கப்பாடு அவசியம்

(கொழும்பு)
நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு இரு பிரதான கட்சிகளும் பிரிவினை அரசியலில் இருந்து விலகி பொதுவானதோர் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டுமென கப்பல்துறை கிழக்கு அபிவிருத்தி துறைமுகஅபிவிருத்தி முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

காலியில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையிலிருந்து வரும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தொடர்ந்து தாய்லாந்தில்பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன.

இவ்வாறானதொரு சுமூகமான நிலையில் பேச்சுவார்த்தைகள் குழப்பமடையும்நிலையில் அனைவரும் தோற்றவர்களாகி விடுவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொடிய யுத்தம் காரணமாக நாட்டு மக்கள் ஒவ்வொருவரினதும் மனங்களில் ஆறாத காயங்கள் பதியப்பட்டுள்ளன எனவும்நினைவுபடுத்தியுள்ளார் (உ-8)

# குளிக்கச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு

(மந்திகை)
கிணற்றில் குளிக்கச் சென்ற ஆறு வயதுச் சிறுவன் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் கொடிகாமம் பாலாவியில் நடைபெற்றுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த நவரட்ணம் நுகிர் என்ற சிறுவனாவார்.

நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு வீட்டுக்கிணற்றில் குளிக்கச் சென்ற பிரஸ்தாப சிறுவனை எங்கும் தேடியும் காணாததால் கிணற்றில் இறங்கித் தேடியபோது அங்கிருந்து சிறுவன் சடலமாக மீட்கப்பட்டான்.

மீட்கப்பட்ட சடலத்தை கொடிகாமம் பொலிசார் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

பிரேதபரிசோதனையின் பின்னர் நேற்று சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-23)

## நிதி நவீன சாதன வசதிக் குறைவு

# வன்னிப் பகுதியில் வெடி பொருள் அகற்றும் பணி மந்தகதியில்

(கொழும்பு)
நிதி மற்றும் நவீன சாதனங்கள் பற்றாக்குறையால் வன்னிப் பகுதியில் வெடி பொருட்கள் அகற்றும் பணி தாமதமடைவதாக மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணிப்பாளர் டி. யோகன் தெரிவித்துள்துள்ளார்.

ஐ. நா. சபையின் உதவியுடன் உலகமெங்கும் பெரும் செலவில் வெடி பொருட்கள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால் வன்னிப் பகுதியில் குறைந்த வளங்களுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கும் உதவியுடனேயே இப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை, போதிய நிதி மற்றும் சாதன வளங்கள் இருப்பின் தம்மால் குறுகிய காலத்தில் கூடிய வெடி பொருட்களை அகற்றி இருக்க முடியும் எனவும்,

தற்போது உடனடியாக மக்கள் குடியேறும் பகுதிகளில் மட்டுமே வெடி பொருட்களை அகற்றி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

# வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்க வாய்ப்பு

(கொழும்பு)
இந்த வருடத்தில் அதிகளவிலான வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்ள முடியுமென இலங்கை முதலீடுகள் சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த வருடத்தில் 20 கோடி டொலர்களை வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து இலங்கை முதலீடாக பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டத்திற்கு அமைவாக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சலுகைகளும் அனுகூலங்களுமே இதற்கு காரணம் என முதலீட்டாளர்கள் சபை தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பாக அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதுடன் வெளிநாட்டு நிறுவனங்களும் வர்த்தகர்களும் இலங்கையில் முதலீடுகளை செய்வதற்கு முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# இந்திய ஊடகவியலாளர்கள் 30பேர் இன்றுஇலங்கைவருகின்றனர்

(கொழும்பு)
இந்தியாவிலிருந்து30ஊடகவியலாளர்கள் அடங்கிய குழுவொன்று இன்று கொழும்பு வருகிறது.

இலங்கை, இந்திய ஊடகவியலாளர்களுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வதற்காகவே இவர்கள் இங்கு வருகின்றனர்.

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் சம்பந்தமாக நேரடி தகவல்களை இவர்கள் பெறுவதுடன்,

அடுத்த வாரமளவில்யாழ்ப்பாணம், அநுராதபுரம் போன்ற இடங்களிற்கும்இவர்கள் விஜயம்செய்யவுள்ளனர். (உ-8)

# வர்த்தக வங்கி யாழ்கிளை கணனி மயமாக்கலுக்கு ஏற்றவாறு அமைப்பு

(யாழ்ப்பாணம்)
வர்த்தக வங்கியின் யாழ்கிளையில்முழுமையானகணனி மயமாக்கலுக்குஏற்றவாறான அமைப்புவேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளைமேற்படி வங்கியே யாழ்ப்பாணத்திலே முதன்முதலாக ஏரிஎன் இயந்திரத்தை பாவனைக்குக் கொண்டுவந்துள்ளது இதனை பயன்படுத்தி பணத்தினைப் பலர் மீளப் பெற்று வருகின்றனர்

இவ் இயந்திரத்தி னூடக விசா, பிளஸ்விசா இலக்றோன் குறியீடுகளைக் கொண்ட ஏ.ரி.என் காட்டுக்களைப் பயன் படுத்தி பணத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும். (உ-2)

# பாக். தீவிரவாதிகளை கட்டுப்படுத்த அமெரிக்கா தலையிடவேண்டும்

## கலைஞர் கருணாநிதி கருத்து

(புதுடில்லி)
இந்திய எல்லைக்குள் தீவிரவாதிகள் நுழையவும், வன்முறைகள், மற்றும் கொலைகள் இடம் பெறவும் இடமளிக்கக் கூடாதெனதிராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் 34 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தை கண்டித்து அறிக்கை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே கலைஞர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும், இந்தியா மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டுமானால் அமெரிக்கா தலையிடவேண்டும்.

வன்முறைகளை உருவாக்கி அதனை தூண்டிவிடும் நாடு எதுவாயினும் அதனை சட்டரீதியாக கண்டிக்கவோ அல்லது சர்வதேச அழுத்தம் கொடுக்கவோ இந்தியா முயற்சி செய்ய வேண்டும் என்றார். (உ-7)

# க.பொ.த (உ-த)பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு உத்தியோகத்தர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
(க.பொ.த (உ-த) பரீட்சை விடைத்தாள் கள்மதிப்பீட்டு உத்தியோகத்தர்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பில் இடம் பெறவுள்ளதாக பரீட்சைததிணைக்களம் அறிவித்துள்ளது

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இதேவேளை மேலதிக பிரதம மதிப்பீட்டாளர்களுக்கான விசேட அறிவுறுத்தல் கூட்டம் திட்டமிட்ட படி எதிர்வரும் 22ப் திகதியும், இரசாயனவியல் பாடத்துக்கான பிரதமமேலதிக மதிப்பீட்டாளர் களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் 21ஆம் திகதியும் கொழும்பில் நடைபெறவுள்ளது.(உ 9

# தீவக கல்வி வலய மெய்வல்லுநர் போட்டி

(ஊர்காவற்றுறை)
தீவக சல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இம் மாதம் 24,25 ஆம் திகதிகளில் ஊர்காவற்றுறை புனிதஅந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை'வேலணை நெடுந்தீவுக் கோட்டப் பாடசாலைகள் இப்போட்டியில் பங்கேற்கவுள்ளன. (உ-75)

# திருவிழிப்பு வழிபாடு

(யாழ்ப்பாணம்)
தூயஆவியாரின்திருவிழிப்பு வழிபாடு இன்று மாலை 7.00 மணிமுதல் ஞாயிறு காலை 5.00 மணிவரை புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து அதிகாலை 4 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. (உ-3)

# மங்கள சமரவீர மீது நிதி துஷ்பிரயோகம் தொடர்பாக குற்றச்சாட்டு

(கொழும்பு)
பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தின் போது அமைச்சர் ஒருவர் தமது அமைச்சின் காரியாலயத்தை புனரமைப்பதற்கென 2கோடியே 5இலட்சம் ரூபாவை செலவு செய்துள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பத்திரமுல்ல சொற் செரிபாய என்னு மிடத்திலுள்ள வீடமைப்பு, பொது நலன்புரி அமைச்சின் காரிய ாலயத்தை புனர்நிர்மாணம் செய்வதற்காகவே இப் பெரும் தொகையை முன்னாள் அமைசர் மங்கள சமரவீர பயன்படுத்தியுள்ளார் என புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நகர அபிவிருத்தி அதிகார சபையை மறு சீரமைப்புச் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட இப்பணத்தினை சகல செலவீன ஒப்பந்தங்களிற்கும் முரணாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்,

இவ்வாறு செலவழிக்கப்பட்ட பணத்திலிருந்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 500 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

# தேர்தல் பிரசாரம் நேற்று நள்ளிரவுடன்முடிவு

(கொழும்பு)
எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தேர்தல் பிரசாரங்கள் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்துள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது, எஞ்சியுள்ள 17 மன்றங்களிற்கான தேர்தலே எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# இறுதிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையே இடம் பெற்று வந்த விளையாட்டு விழாவின் இறுதிமெய்வல்லுநர் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும்யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளன.

காலை 8.30 மணி தொடக்கம் இடம் பெறும்இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (உ-10,2)

# 245 தபால் பொதிகள் எடுத்துவருகை

(யாழ்ப்பாணம்)
நேற்று முன்தினம் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச்சங்ககப்பலில் குடாநாட்டிற்கான245 வெளியூர்தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளதாகவும்,

இங்கிருந்து 31 தபால்பொதிகள் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10)

# வாடிக்கையாளர் சந்திப்பும் ஜயஸ்ரீ பரிசளிப்பும்

(சங்கானை)
சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் நேற்று முகாமையாளர் பி. அச்சுதம் பிள்ளை தலைமையில் வாடிக்கையாளர்களுடனான கலந்துரையாடலும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக உதவிப் பிராந்திய முகாமையாளர்கே.ஏ.ஆனந்தராசா, பிரதேச முகாமையாளர் கே.எம். சிவபாதவிருதையர்ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து ஜயஸ்ரீ திட்டத்தில் பரிசுபெற்ற சங்கானையைச் சேர்ந்த நாராயணலிங்கம் என்பவருக்கு குளிர் சாதனப்பெட்டி வழங்கப்பட்டது. (உ-123)

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெஷாக் தினத்தன்று யாழ். வருவார்

(நெல்லியடி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவெஷாக் தினமான எதிர் வரும் 26 ஆம்திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளதாக தெரியவருகிறது.

அண்மையில் தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி இடம்பெற்ற சமாதானப் பேரணியில், யாழ். நாகவிகாரவைக்கென எடுத்துவரப்பட்ட கலசத்தினைப் பொருத்தும் சமய நிகழ்வு வெஷாக் தினத்தன்று இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் கலந்துகொள்வதே பிரதமரின் யாழ்ப்பாண விஜயத்தின் முக்கிய நோக்கமாகும்.

பௌத்தர்களின் புனித நாளானவெஷாக் தின வாழ்த்துச் செய்தியினையும் பிரதமர் யாழ்ப்பாணத்தில் இருந்தே வெளியிடுவார் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கபிரதமராகப் பதவி ஏற்ற பின்னர் முதல் தடவையாக இருநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த மார்ச் மாதம் 14திகதி யாழ்ப்பாணம் வருகை தந்தமை தெரிந்ததே. (உ-24-7)

## இலங்கையில் இடம்பெறும் சமாதான முயற்சி குறித்து மாலைதீவு மகிழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் தற்போது அரசாங்கத்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகளினாலும்கடைப்பிடிக்கப்பட்டு வரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் முன்னேற்றம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெனாண்டோ மாலைதீவு ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

அண்மையில் மாலைதீவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதியை சந்தித்தபோதே இதுவிடயத்தை விளக்கினார்.

இச்சந்திப்பின்போதுமாலைதீவு ஜனாதிபதி வைமூன் அப்துல் தெய்மி கருத்துதெரிவிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்று வரும் சமாதான முன்முயற்சிகள் குறித்து தமது நாடு மகிழ்ச்சியடைவதாகவும்,

தமது நாட்டின் மனிதவள அபிவிருத்திக்கு இலங்கை வழங்கிவரும் பங்களிப்பையும் எடுத்து கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் மாலைதீவு வர்த்தக சமூகத்தினரையும் சந்தித்துள்ளார். (உ-8)

## சாவ. நகரில் மீண்டும் வங்கி கிளைகள் இயங்கும்?

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் கிளைகளை மீளவும் இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம் மூன்று வங்கிகளின் கிளைகளும் சாவகச்சேரி கண்டி வீதியிலுள்ள தனியார் கட்டடங்களில் இயங்கவுள்ளன.

இவற்றுக்கான இடங்கள் யாவும் தெரிவுசெய்யப்பட்டு அவற்றின் உட்கட்டமைப்புப் பணிகள் தற்போது துரித கதியில்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது இம் மூன்று வங்கிக் கிளைகளும் பலத்த சேதத்துக்கு உள்ளாகின என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## முன்பள்ளி பொறுப்பேற்பு

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு மத்தி நாவலர் முன்பள்ளியினை அனலையம்பதி ஸ்ரீ எழுமங்கை மனோன்மணி அம்பாள் ஆலய அறங்காவலர் சபையினர் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர். (உ-75)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உடுவிலை வசிப்பிடமாகக் கொண்ட முத்தையா இராசேந்திரன் தவநேசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகைகாரியாலயத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது. அடையாள அட்டைக்குரியவர் அலுவலக நேரத்தில் வந்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம். (த-5)

## சமாதானப் பேச்சுக்கு முன் புலிகளின் தடையைநீக்குக பிரதமரிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலை புலிகள் மீதான தடையை தாய்லாந்துப் பேச்சு வார்த்தைக்கு முன்பு நீக்கவேண்டுமென்று தமிழ்க்கட்சி க்கூட்டமைப்புத் தலைவர்களானமு. சிவசிதம்பரம், அ. விநாயகமூர்த்தி ஆகியோர் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குமாறு கேட்பது நியாயமானதாகும், இதனைச் சிந்தித்து உடனடியாகத் தீர்மானிக்க வேண்டுமென்று அவ்வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மக்கள் சமாதான முன்னணிஎன்றஅமைப்பினரும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்மென்று கோரியுள்ளதுடன், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி 3 ஆயிரம் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும்மென்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

## துன்புறுத்தப்பட்ட இலங்கைப் பெண்கள் பன்னிருவர்நாடுதிரும்பினர்

(கொழும்பு)

துபாயில் உள்ள இலங்கையர் ஒருவரின் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த 12 இலங்கைப் பெண்கள் அங்குள்ள அதிகாரிகளின் கெடுபிடிகளைத் தாங்க முடியாது இலங்கைத் தூதரகமூடாக நாடு திரும்பியுள்ளனர்.

கடுமையாகத் துன்புறுத்தப்பட்ட நிலையில் இவர்களில் ஒருவர் மனம் குழம்பியுள்ளார்.

'சன் இன்ரநாஷனல்' என்னும் நிறுவனத்தில் கடமையாற்றிய மேற்படி பெண்கள்,

தமக்கு நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி இலக்குகளை அடையாது விட்டால் தலையில் அடித்தல், மணித்தியாலக் கணக்காக வெயிலில் நிறுத்திவைத்தல் போன்றதண்டனைகள் வழங்கப்படுவதாகவும்,

ஒப்புக்கொண்ட சம்பளத்தை வழங்காது குறைத்து வழங்கப்படுமிடத்து அதனைச் சுட்டிக்காட்டினால் சம்பளத்தை முற்றாக நிறுத்திவிடுவதாகவும் தமது கண்ணீர் கதையை தெரிவித்துள்ளனர். (உ)

## சீமெந்துடன் இந்துருவலி வந்தது

(யாழ்ப்பாணம்)

தூத்துக்குடியில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு வேண்டிய 2 ஆயிரத்து800 மெற்றிக்தொன் சீமெந்தினை ஏற்றிக் கொண்டு இந்துருவலி கப்பல் பருத்தித்துறைதுறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இவற்றினை இறக்கும்பணி இப்போது இடம்பெற்றுவருகின்றது. (உ-10)

## நடிகர் ரஜனி சென்ற விமானத்தில் கோளாறு

### விமானியின் சாதுரியத்தால் உயிர்பிழைப்பு

(புதுடில்லி)

பாபா படப்பிடிப்புக்காக சுப்பஸ்ரார் ரஜனிகாந் லண்டன் சென்றுகொண்டிருந்த விமானத்தில் இடையில் கோளாறு ஏற்பட்டது.

விமானியின் புத்திசாதுரியத்தால் விமானம் இடை நிறுத்தப்பட்டதால் ரஜனிகாந் உட்பட அதில் சென்ற 296 பேரும் உயிர் பிழைத்துள்ளனர்.

மேற்படி விமானத்தில் கோளாறு ஏற்பட்டிருப்பதை விமானி கண்டு பிடிக்கத்தவறியிருந்தால் அது 10 நிமிடத்தில் விபத்துக்குள்ளாகியிருக்குமென்று கண்டறியப்பட்டுள்ளது. (உ-7)

## அகதிகள் கணக்கெடுப்பு

(ஊர்காவற்றுறை)

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனமும் அகதிகள் மீளக்குடியமர்த்துகை புனர்வாழ்வு அமைச்சும் இணைந்து நடத்தும் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான கணக்கெடுப்பு தீவகப் பகுதிகளான எழுவைதீவு, அனலைதீவு ஆகிய பகுதிகளிலும் இடம்பெற்றுவருகின்றது. (உ-75)

## தீவு இராணுவப் பிரதேசம் படையினர் பிரகடனம் புறு கொவ்டே கண்டனம்

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரெண்ட் புறு கொவ்டே கடந்த புதனன்று நோர்வே திரும்பியுள்ளார்.

கடந்த வார இறுதியில் வன்னிக்கு, விஜயம் செய்த புறு கொவ்டே, அங்கு புலிகளின் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இதன்போது தீவுப்பகுதிக்கு சுதந்திரமாகச் செல்லுதல்ஏ-9 தரைவழிப்பாதையில் நிலவும் சிக்கல், வன்னிக்கும் கிழக்கு மாகாணத்திற்கும் இடையிலான கடல்வழித் தொடர்பு ஆகியன குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டன.

மேற்படி சந்திப்புக்குறித்து கருத்து வெளியிட்ட புறு கொவ்டே, 33 ஆயிரம் மக்கள் வசிக்கும் ஒரு பகுதியை இராணுவப் பிரதேசம் என்று படைத்தரப்பு பிரகடனம் செய்வது முறையற்றது எனவும், இது குறித்த விவகாரத்தை அரசாங்கத்திடம் பாரப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, நோர்வேயில் சென்றுள்ள இவர் அங்கு நோர்வேயின் வெளியுறவு அமைச்சர், மற்றும் அதிகாரிகளுக்கு இவ் விடயங்களை விளக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## வருடாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண- துடுப்பாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு யாழ்- இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ)

## சங்கே முழங்கு

### அச்செழு மக்களின் ஆதங்கம்

அச்செழு கிராமம் சிறிய கிராமமாக இருந்தாலும் பல் வளமும் செறிந்தபிரதேசம் இங்கு சரித்திரப்பாடல் பெற்ற புராதன ஆலயங்களும் மக்களின் இடர்களை/வைத்தியர்களால் குணப்படுத்த முடியாத நோய்களை அறுக்கவல்ல ஆலயங்களும் அறிவுப் பசியைப் போக்கும் கல்விக் கூடங்கள், இங்கு வந்தோரை வரவேற்று, வதிவோரை வாழ்விக்கும். வாழைகளும், தண்ணளியோடு தலை நிமிர்ந்து நிற்கும் தாகத்தை தீர்க்கும் தென்னைகளும், சுவையான பல்பொருள் தரும் கற்பகத்தருக்களும், பல இன கனிகளை அளிக்கும் மா, பலா, தோடை போன்ற சுவை விருட்சங்களும் நிறைந்தது அச்செழுக் கிராமம். அது மட்டுமா விவசாயத்திற்கே பெயர் பெற்றது. புகையிலை, கிழங்குபோன்றவற்றுக்கு தனிப்பெருமை உண்டு.

தண்ணீருக்கே தனிமவுசு உண்டு. இத்தோடுமாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கம், கிராம அபிவிருத்திச்சங்கம், மகளிர் சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம், சமூக அபிவிருத்தி சேமிப்பு கழகம், விவசாய சம்மேளனம் போன்றன தற்போது இயங்குகின்றன.

இங்குள்ள மக்கள் ஊக்கமும், உற்சாகமும் உடையவர்கள். அரச பணியில் ஈடுபட்டவர்கள் கூட இரு தொழில் செய்யாதவர்கள் அரிது. ஆனால் இன்றோ வளம் பொருந்திய விவசாய நிலங்கள் இன்று பற்றை காடாகக் காட்சியளிக்கின்றன. வளங்கள் முழுமையாக படையினரால் முடக்கப்பட்டுள்ளன. அதனால் மக்கள் தொழில் வாய்ப்பின்றி நிவாரணத்தையே நம்பி வாழ்கின்றவரை விட நடுத்தர மக்களின் நிலை சிறுதொகை ஓய்வூதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடாத்த முடியாத நிலையில் தவிக்கின்றனர். தென்மராட்சி மக்களுக்கு நிவாரணம் வழங்குவது போல் அச்செழு கிராமத்தில் பாதிக்கப்பட்ட 'உ' அட்டைக் காரருக்கும் மனிதாபிமானத்துடன் வழங்க அரச அதிகாரிகள் முன்வராமை கவலைக்குரியது ஆகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் எமது கிராமத்தில் பாதுகாப்பு வலயத்தில் முடக்கப்பட்டுள்ள பின்வருவனவற்றுள் சிலவற்றையேனும் விடாமை கண்டனத்துக்குரியதாகும்.

179 வீடுகள், அச்செழு சிவகாமி அம்மன், கண்ணகை அம்மன் ஆலயம், அச்செழு சித்தி விநாயகர் ஆலயம், அச்செழு மீனாட்சி அம்மன் ஆலயம், யா/ அச்செழு சைவப்பிரகாசவித்தியசாலை, யா/ அச்செழு மெ.மிசன் வித்தியாசாலை, ப.நோ. கூ.சங்கம் கிளை I, ப.நோ.கூ. சங்கம் கிளை II, ஆஸ்பத்திரி, மத்திய நூல் நிலையம், பாலர் கல்வி நிலையம், அஞ்சல் அலுவலகம், தனியார் வர்த்தக நிலையம் 5, மா அரைக்கும் ஆலை, போக்கு வரத்துப் பாதைகள் மூடப்பட்டமை, தனிப்பனையடி சனசமூக நிலையம்.

ஆகவே படையினர் வேறோர் இடத்தைத் தெரிவு செய்து எமது இயல்பு வாழ்க்கைக்கு உதவ வேண்டுமெனக் கோருகிறோம். மற்றும் கண்காணிப்புக் குழுவினர், அரசியல், வாதிகள் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆவன செய்து உதவும் வகையில் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

த. நல்லதம்பி

தலைவி

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்

அச்செழு.

## இன்று ஒரு தகவல்

### கடவுளோடு பேரம்

ஒரு அரசன் வேட்டையாடுவதற்காக காட்டுக்குச் சென்றான். அங்கே ஒரு முனிவரைச் சந்தித்தான். அவரோடு சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தான்.

அதன் பிறகு அவரைப் பார்த்து, 'நான் தங்களுக்குக் கொடுக்கப்போகும் பரிசை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டான். முனிவர், 'வேண்டாம்' என்று மறுத்துவிட்டு, 'நான் என் தற்போதைய நிலையில் பரிபூரண திருப்தி கொண்டிருக்கிறேன். இந்த மரங்கள் என் உணவுக்குப் போதுமான பழங்களைக் கொடுக்கின்றன. இந்த அழகான சுனைகளில் எனக்குத் தண்ணீர் கிடைக்கிறது. இவையிருக்கும்போது உன் பரிசால் எனக்கு ஆகப்போவது என்ன?' என்றார்.

'என்னுடைய திருப்திக்காக வேனும் தாங்கள் என் ஊருக்கு வந்து நான்கொடுக்கும் பரிசை ஏற்றருள வேண்டும்' என்று அரசன் வேண்டினான். முனிவரும் அரசனுடன் செல்லச் சம்மதித்தார்.

பொன்னும், மணியும் நிறைந்து விளங்கிய அரண்மனைக்கு வந்ததும், அரசன் முனிவரை ஒரு நிமிஷம் இருக்கும்படி சொல்லிவிட்டு, ஒரு மூலையில் போய் நின்று கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்யலானான். 'கடவுளே! எனக்கு இன்னும் அதிகச் செல்வத்தைக் கொடு, இன்னும் அதிகம் குழந்தைதைகளைக் கொடு, இன்னும் அதிகபூமியைக் கொடு' என்று பிரார்த்தித்தான் அரசன்.

முனிவரோ இருப்பிடத்தை விட்டு எழுந்து வெளியே புறப்பட்டார். இதைப் பார்த்த அரசன், 'முனிவரே! என் பரிசை வாங்கிக்கொள்ளாமல் போகிறீர்களே? கொஞ்சம் இருங்கள்' என்றான்.

முனிவர் அரசனைத் திரும்பிப் பார்த்து, 'பிச்சைக்காரனே! நான் பிச்சைக்காரர்களிடத்தில் பிச்சை வாங்க மாட்டேன். நீயே பிச்சை கேட்டுக் கொண்டிருக்கும்போது, எனக்கு உன்னால் என்ன கொடுக்க முடியும்? கடவுளைப் பார்த்து 'இதைக் கொடு, அதைக்கொடு' என்று கேட்டால், அன்புக்கும், கடை வியாபாரத்திற்கும் என்னடா வித்தியாசம்?' என்று கேட்டார். ●

மாகியம்பதி தீபன்

# வேவு விமானங்கள் பறப்பது ஒப்பந்தத்தை மீறும் செயலல்ல

## பாதுகாப்புத்துறை நியாயப்படுத்துகை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உட்பட இலங்கையின் எப்பகுதியிலும் எமது விமானங்கள் பறக்கும் உரிமையை வைத்திருக்கின்றோம்.

வடக்கு-கிழக்கு வான்பரப்பில் விமானியின்றி இயங்கும் விமானம் பறப்பதானது பரஸ்பரம் நம்பிக்கையை கட்டி வளர்ப்பதென்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மீறும் செயலாகும் என்றுவிடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பது தவறானது.

இவ்வாறு அதிகாரபூர்வ பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானியின்றிப் பறக்கும் வேவுவிமானங்கள் தொடர்ந்தும் வடக்குகிழக்கு எங்கிலும் பறக்க முடியும்.

இது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலல்ல. இரு தரப்பினரும் வேவு நடவடிக்கையில் ஈடுபடுவதை புரிந்துணர்வு ஒப்பந்தம் தடை செய்யவில்லை என்று மேலும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்ததாக ஆங்கிப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(உ)

## வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட மன்றுளாடும் விநாயகப் பெருமான் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஆலயதேர், தீர்த்தஉற்சவங்கள் 25, 26ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளன.

(உ-8)

## சமாதான நடவடிக்கை வெற்றிகரமாக முன்நகரும்

### எஸ். பி. நம்பிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையே நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பினும் சமாதான நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுமென விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ். வி. திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினருக்குமிடையே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் பல்வேறு ஆலோசனைகளைநடாத்திய பின்பே தயாரிக்கப்பட்டது.

இதேவேளை, இந் நாட்டில் முன்பு ஆட்சி செய்த ஒவ்வொரு ஆட்சியாளர்களும் புலிகளுடன் பேச்சு நடத்தியபோது எதிர்நோக்கிய பிரச்சினைகள் பற்றிபிரதமர்நன்கு அறிவார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியால் பொருட்களில் விலை யேற்றம் பற்றியோ, ஏனைய பிரச்சினைகள் பற்றியோ தற்போதைய அரசின் மீது குற்றம் சுமத்தமுடியாது.

அரசு பதவியேற்கும் போது பொருளாதாரத்துறை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. இதை மீட்க அரசு கட்டம் கட்டமாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்திருப்பதும் ஒரு முன்னேற்றகரமான நிலைக்கு வழிவகுக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-9)

## வழிபாட்டுத் தலங்கள்

### புனரமைப்பில்லை

(தென்மராட்சி)

யுத்தத்தினால் சேதமடைந்த 20 இதற்கும் அதிகமான இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் தென்மராட்சிப் பகுதியில் புனரமைப்போ, வழிபாடுகளோ இன்றி இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கேற்ற நிதியை அரசோ அல்லது பொது நிறுவனங்களோ வழங்காமையே இதற்குக் காரணமாகும்.

(உ-77)

யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க

## டென்மார்க் பிரதிநிதிகள் எண்மர் விரைவில் வருவர்

(கொழும்பு)

டென்மார்க்கிலிருந்து 8சிவில் அதிகாரிகள் யுத்த நிறுத்தத்தை கண்காணிப்பதற்கென இலங்கைக்கு வரவுள்ளதாக டென்மார்க்கின் வெளிவிவகார அமைச்சர் பேத்ஸ்ரிக்மஹ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினதும் அரசாங்கத்தினதும் வேண்டுகோளுக்கு இணங்க நோர்வே, சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 20 அங்கத்தவர்கள் கொண்ட கண்காணிப்பு குழு இங்கு ஏற்கனவேவந்துள்ளது.

அரசு- புலிகள் ஒத்துழைப்புக்களினதும், வேண்டுகோளினதும் அடிப்படையில் இக்குழுவை 45 அங்கத்தவர்கள கொண்ட குழுவாகவும் அதிகரிக்கவுள்ளது தெரிந்ததே.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும்இடையில் தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது டென்மார்க்கும் பங்கு கொள்ள விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் வெளியுறவு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ- 8)

## பொலிஸ் திணைக்கள வாகன கொள்வனவு ஊழல் ஆராய சி. ஐ. டிக்கு பணிப்பு

(கொழும்பு)

கடந்த அரசாங்ககாலத்தில் பொலிஸ்திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான முறைகேடுகள், ஊழல்கள் என்பனவற்றை முழுமையாக ஆராயுமாறு சி. ஐ. டீ யினருக்கு உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட கேள்வி நடைமுறைகளை மீறி பெருந்தொகையான மோட்டார் சைக்கிள்கள் ஒவ்வொன்றும் ஒன்றரை மில்லியன் ரூபா வீதம் கொள்வனவு செய்ப்பட்டு ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினருக்கு வழங்கப்பட்டன. ஆனால் இதற்கான அனுமதியை யார் வழங்கினார்கள் என்று கண்டறியப்படவேண்டியுள்ளது என அமைச்சர் கூறினார்.

(இ)

## ஐ.தே.முவின் நோக்கம் எம்மை எதிர்ப்பதே

### எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐ.தே.முன்னணி அரசினால் மேற்கொள்ளப்படும்100நாள் வேலைத்திட்டத்தின்கீழ் எதிர்க்கட்சிகளுக்கெதிரான நடவடிக்கைகள்மட்டுமேமேற்கொள்ளப்படுகிறது என்று எதிர்க்கட்சி தலைவர்மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நுகேகொடவில்பொ.ஐ.முன்னணி தலைமையில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி அரசு நாட்டிற்கும் மக்களுக்கும் பயனளிக்கும் எந்த வித நடவடிக்கையயும்மேற் கொள்ளவில்லை.

அரசு ஆட்சிக்கு வர முன் மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளித்த போதும் அதை முன்னெடுப்பதை விடுத்து எதிர்க்கட்சிக்கு எதிரான நடவடிக்கையில்ஈடுபடுகிறது என்றும் குற்றம் சாட்டினார்.

(உ-9)

## இருப்பிட வசதி தேடி அலையும்வலிவடக்குமக்கள்

(ஏழாலை)

யாழ். குடா நாட்டிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த வீடுகளுக்கு திரும்பத் தொடங்கியதை அடுத்து, வீடுதேடி அலையும் குடும்பங்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் வசித்து வந்த மக்கள் மீண்டும் தமது சொந்த வீடுகளில் குடியமரத் தொடங்கியதை அடுத்து இவர்களின் வீடுகளில் இருந்த வலி வடக்கு பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாதநிலையில், தற்பொழுது இருப்பதற்கு இடம் இன்றி வீடு தேடி அலைகின்றனர்.

(உ-12)

## அத்துமீறிகடலில்நுழைந்த 7இந்திய மீனவர்களுக்கு 29வரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

சாரைநகர் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டவேளை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 7இந்தியமீனவர்களும் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

காக்கையன் மதுரைவீரன், குருசாமி தேவகுமார், செபமாலை கெனடி, முருகேசன் சின்னமுனியர், முத்துமணி ஆண்டி, கறுப்புசாமிபாலமுருகன், ஆண்டி சுப்பையா ஆகிய7பேருமேஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும்29ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிபதி திருமதி இளங்கோவன்உத்தரவிட்டார்.

(உ-10)

## மந்திகள் அட்டகாசம்

(தென்மராட்சி)

மட்டுவில், நுணாவில், கல்வயல் பகுதிகளில் குரங்குகள் மற்றும்பன்றிகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகஅப் பகுதிகளில் மீளக் குடியமர்ந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பகல் வேளைகளில் குரங்குகளின் அட்டகாசமும், இரவு வேளைகளில் பன்றிகளின் அட்டகாசமும் தாங்க முடியாது உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

(உ- 77)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் 9பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பி. ப. 4.30 மணிக்கு அல்வாய் மனோகரா வி. க. எதிர் கரணவாய் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகியன மோதவுள்ளன.

(உ- 3)

## தென்மராட்சி கல்வி வலயம் சாவகச்சேரியில்

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலய பணிமனை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள ஒரு தனியார் இல்லத்தில் இயங்கவுள்ளது.

இப்பணிமனை ஜூன் முதலாம் திகதி முதல் சாவகச்சேரியில் இயங்கும்என நம்பப்படுகின்றது.

(உ- 77)

## சிந்தனைக்கு விருந்து

### ஒருவருக்குச் சுவைக்கறி மற்றவருக்கு விடம்

(One man's meat is other man's poison)

ஆயுதம் விற்கும் ஆள்களுக்கும்  
அதிலே தரகினை அடிப்போர்க்கும்  
வாயுறப் பொய்கள் பல கூறி  
வாழ்தற்கான பொரு ளீட்டும்  
காய்மன அரசியல் வாதிகட்குக்  
கனிசுவைக் கறியாம் போரெனிலோ  
தாய்மனம் கொண்ட அருளாளர்  
தங்கட் கொடுவிடம் அதுவாகும்.

- பழையவன்

# இந்தியாவில் கடும் அனல் காற்று இதுவரையில் 622 பேர் மரணம்

(புதுடில்லி)

இந்தியாவில் சடும் அனல் காற்றினால் பாதிக்கப்பட்டு பலியானவர்களின் எண்ணிக்கை 622 ஆக அதிகரித்துள்ளது.

வழமைக்கு மாறாக இவ்வாண்டு அதிகரித்துள்ள வெப்பத்துடன் கூடிய காற்றினால் பாதிக்கப்பட்டவர்கள வைத்தியசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டு பின்னர் சிகிச்சை பலனளிக்காமல் பலியாகிவருகின்றனர்.

நடைபாதை வியாபாரிகள், மற்றும் விவசாயிகளே மேற்படி காற்றினால் பாதிக்கப்பட்டு பலியானவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

# வீரப்பனை 10 நாட்களில் கைது செய்து காட்டுவேன்

## இந்திய விஞ்ஞானி சபதம்

சந்தனக்கடத்தல் வீரப்பனை இன்னும் 10நாட்களுக்குள் கைது செய்து காட்டுவேன் என்று விஞ்ஞானி டாக்டர் ரவிநாதன் தெரிவித்துள்ளார்.

அகமதாபாத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலே அவர் இதனை தெரிவித்தார்.

காட்டுக்குள் மறைந்துள்ள வீரப்பனை பிடிக்க தமிழ் நாடு கர்நாடக அதிரடிப் படையினர் 10 ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

அந்தப் பொறுப்பை என்னிடம் தந்தால்பத்தேநாட்களில் வீரப்பனை கைது செய்து காட்டுவேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (உ- 7)

### பத்திரிகையாளர் டானியல் பேர்ள்

# புதைக்கப்பட்ட இடத்தை அமெரிக்கா கண்டுபிடிப்பு

(வாஷிங்டன்)

கொலை செய்யப்பட்ட அமெரிக்கப் பத்திரிகையாளர் டானியல்பேர்ள் புதைக்கப் பட்டிருக்கலாம் என்று நம்பப் படும் கல்லறை ஒன்றை அமெரிக்கப் பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் கராச்சியில் வைத்து கடத்தப் பட்டு காணாமல் போன டானியல் பேர்ள் பின்னர் பாகிஸ்தானியரால் கொல்லப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ- 7)

### வடக்கு -கிழக்கில்

# பயிற்றப்படாத ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் திட்டம் அமுல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பயிற்றப்படாதஆசிரியர்களாகக் கடமையாற்றும் சுமார் 2 ஆயிரம் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் செயற்றிட்டம் ஒன்றை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம்.இஸ்ஸதீன்இந் தகவலை வெளியிட்டார்.

இச் செயற்றிட்டத்திற்கென உலகவங்கியின் பொதுக் கல்வித் திட்ட அபிவிருத்தியின் கீழ் 40 மில்லியன் ரூபாக்களை மத்தியகல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களத்திற்கு வழங்கவுள்ளது.

இது தொடர்பான ஏற்பாடுகளை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் க.சண்முகலிங்கம் மத்திய கல்வி அமைச்சர் செயலாளருடன் தொடர்பு கொண்டு செய்துள்ளார்.

வடக்கு -கிழக்குமாகாணத்தில் உள்ள 9கல்விமாவட்டங்களில் உள்ள ஆசிரியர் கல்வி நிலயங்களூடாக இப்பயிற்சித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் எனவும்.

இதற்கெனமாவட்டஇணையாளர்களைமாகாண கல்வித் திணைக்களம் ஏற்கனவே நியமனம் செய்துள்ளதாகவும் மாகாண கல்விப் பணிப்பாளர் இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார். (உ)

### ஆப்கானிஸ்தானில்

# இனம் காணமுடியாத நுண்ணங்கித் தாக்கம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இனங் காண முடியாத நுண்ணங்கி ஒன்றின் தாக்கத்திற்குள்ளான 6பிரித்தானிய மருத்துவர்கள் சொந்த நாட்டுக்குத் திருப்பி யனுப்பப்பட்டுள்ளனர்.

மிகவும் மோசமான ஆபத்துக்களை விளைவிக்கக் கூடிய இந்த நுண்ணங்கிகள் பற்றிய ஆய்வுகள் துரிதகதியில் இடம் பெற்று வருகின்ற வேளையிலும், இதன் தன்மை எது? எங்கு உருவாகிறது? என்ற தகவலை அறிய முடியாதுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காபூலின் வடக்கே உள்ள விமான நிலையத்தில் உள்ள 8அதிகாரிகள் இந்த நுண்ணங்கியால்பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும்தெரிவிக்கப்படுகிறது. (உ- 7)

# இ. போ. வ. சபையின் உதைபந்தாட்ட அணி யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் ஜூன் மாதம் 7, 8, 9 ஆம் திகதிகளில்இலங்கையின் போக்குவரத்துச் சபையின் உதைபந்தாட்ட அணி யாழ். உதைபந்தாட்ட அணிகளுடன் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் மோதவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்றும் நோக்குடன் கொழும்பில் இருந்து வருகை தரவுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை அணியில் இலங்கையின் தேசிய உதைபந்தாட்ட அணியில் விளையடும் 5 வீரர்களும் அங்கம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் உதைபந்தாட்ட அணியினர் யாழ். லீக். பருத்தித்துறை லீக், முன்னணி விளையாட்டு அணிகளுடனும் மோதவுள்ளது.

கொழும்பின் திறமை வாய்ந்த ரட்ணம் கிளப் உதைபந்தாட்ட அணியும் அடுத்த மாதம் 20 ஆம்திகதியாழ்ப்பாணம் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# வல்லைப் பகுதியில் சட்டவிரோத கல் அகழ்வு தட்டிக்கேட்பாரில்லை

(நெல்லியடி)

வல்லை மற்றும் கப்பூது வெளிகளில் சட்ட விரோதமாக கல் அகழும் சம்பவங்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகின்றன.

வல்லைப் பகுதியில் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிக்கு மேற்கே கடலேரிக்கு அருகாக ஆதிகளவில் கற்கள் அகழ்ந்தெடுக்கப்படுகின்றன.

இதனால், உவர்நீர் நிரந்தரமாக அப்பகுதியில் தேங்கி நீர் நிலைகள் உவர்த்தன்மை கொண்டதாக மாறும் அபாயம் உள்ளதாக சூழலியலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, முன்னர் இப் பகுதிகளில் ஊரி மணல் அகழப்பட்ட கிடங்குகளிலும் உவர்நீர் தேங்கி நிற்பதை அவதானிக்க முடிகின்றது. (உ-247)

# பண்பற்ற இளம் சந்ததி உருவாகஅனுமதிக்ககூடாது

### அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு

(கொழும்பு)

சிறுவர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளினை மேற்கொள்ளும் வகையில் ஊக்கமளிக்கப்பட வேண்டும் என கல்வி, கலாசார, மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப் பட்டு வன் செயல்களை மேற் கொண்டுவரும் இளம் சந்தியினர் போன்று, இனிவரும் காலங்களிலும சிறுவர்களை வளர அனுமதிக்கக் கூடாது.

சிலாவத்தையில் புதிய கலாசார நிலையத்தை திறநது வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்;

பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படுவதற்கான காரணம் முன்னைய ஆட்சிக் காலத்தின் போது, ஆசிரியப்பயிற்சிகளை முடித்துக் கொண்டோரை பிற மாவட்டங்களிற்கு சென்று கடமையாற்ற அனுப்பப்படாமையே எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

# கஜேந்திரகுமார் எம்.பி, லண்டன் பயணம்

### பரிஸ் பொங்கு தமிழிலும் பங்கேற்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று முன்தினம் லண்டன் பயணமாகியுள்ளார்.

ஜேர்மன், கொலம்பிய, பிரான்ஸ்ஆகிய நாடுகளுக்கும் செல்லவுள்ள கஜேந்திரகுமார் எம்.பி. அங்கு அந்நாட்டு முக்கியஸ்தர்களைச் சந்தித்து, வடக்கு- கிழக்கின் தற்போதைய நிலை குறித்தும் புலம் பெயர்ந்துள்ள தமிழர்களின் நிலை குறித்தும் கலந்துரையாடுவார்.

அத்துடன் நாளை பிரான்ஸின் தலைநகர் பரிஸில்இடம் பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

# காஷ்மீர் தாக்குதலுக்கு அமெ. அதிபர் கண்டனம்

(வாஷிங்டன்)

காஷ்மீரில் 34 பயணிகள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு, அமெரிக்க அதிபர் கண்டனத்தையும் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்ட புஷ் காஷ்மீர் சம்பவத்தை தான் வன்மையாக கண்டிப்பதாகவும், இதுபோன்ற தீவிரவாதிகளையும் அவர்களுக்கு ஆதரவு அளித்துவரும் சக்திகளையும் கூண்டோடு அழிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இறந்த 34 பேரின் குடும்பங்களுக்கு விரைவில் உதவி வழங்குவதாகவும் தெரிவித்தார். (உ-7)


## கட்டிட வேலை ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல்

யாழ். போதனா வைத்தியசாலையில் கட்டிட வேலைகளுக்கும், கட்டிட திருத்த வேலைகளுக்கும் ஒப்பந்தகாரர்களை பதிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த இருவருட காலத்துள் இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பதிவு செய்த கட்டிட ஒப்பந்த காரர்களை மட்டுமே வைத்தியசாலை கட்டிட வேலைகளுக்குப் பதிவு செய்ய இருப்பதனால் தகைமை உடையவர்கள் எதிர்வரும் 30. 05. 2002 க்கு முன்பு தங்களைப் போதனா வைத்தியசாலையில் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள். இக்ராட்டில் பதிவு செய்த போட்டோப் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

ஒப்பம்

வைத்தியகலாநிதி
(செல்வி) என். கனகரத்தினம்
பணிப்பாளர்

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (C-4271)


### தீவகத்தில் இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும்

# மக்கள் நலன் காப்பக ஏற்பாட்டில் மாபெரும் கையெழுத்து வேட்டை

(ஊர்காவற்றுறை)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தீவகத்தில் இயல்புநிலைதோன்றுவதற்கு வழிவகை செய்யக் கோரி, தீவக மக்கள் நலன் காப்பகத்தினால் மாபெரும் கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கையெழுத்துப்போராட்டம் தீவகம் முழுமையும்இடம் பெற்று வருகின்றது.

கையெழுத்துக்கள் திரட்டப் பட்டபின்னர், யாழ் மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம்கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை, தீவகப்பகுதி நிலைவரத்தை நேரில் கண்டறிய விஞ்ஞான தொழில்நுட்ப பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-75)

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா இனனும் அறிந்தியாக்கநட்பு.

குறள்

# வலம்புரி

## தடம்புரளும் சமாதானம்

அரசும்- விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நிரந்தர யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி சமாதானத்தைத் தந்து விடுமென நம்பப்பட்டது.

எனினும் அரசின் தற்போதைய போக்கு சமாதானத்தில் சந்தேகத்தை எழவைத்துள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட ஆரம்ப கட்டத்தில் சமாதான முயற்சிகளில் அரசு முனைப்புடன் ஈடுபட்டதாகவும், தற்போது அரசின் சமாதான ஆர்வம் குறைந்து செல்வதாகவும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றம் சாட்டியுள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட பல விடயங்கள் இன்னமும் அமுல்படுத்தப்படவில்லை.அத்தோடு விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம் குறித்தும் அரசு கவனமெடுக்கவில்லை எனக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் வைத்துள்ளார் தமிழ்ச்செல்வன்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் முன்வைத்தஆதாரங்களை நோக்கின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் வணக்கத்தலங்களில் முகாமிட்டிருக்கும் படையினர் உடனடியாக வெளியேற வேண்டும்.

எனினும் அது இன்று வரை நடைமுறைப் படுத்தப்பட்டதாகவோ அல்லது அது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவோ தெரியவில்லை.

இதேபோன்றுதான் குடாநாட்டின் வலிவடக்கில் உள்ள பாடசாலைகளில் முகாமிட்டுள்ள படையினர் அவற்றிலிருந்து வெளியேறாமல் இருப்பதுமாகும்.

நாட்டில் புரையோடியுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது வெறும் காகிதாகிகளில் எழுதப்படும் ஒப்பந்தங்கள் மூலம் ஒருபோதும் ஏற்படப்போவதில்லை. மாறாக இருதரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள நம்பிக்கையைப் பொறுத்தும் உள்ளார்ந்தமான விட்டுக்கொடுப்பனவுகளைப் பொறுத்துமே தீர்வு ஏற்பட முடியும். ஆனால் இவ் இரண்டு விடயங்களும் அரசின் சமாதான முயற்சியில் கிடைத்தற்கரியதாகவேயுள்ளது.

# பிரபாகரனிடம் நாட்டை கொடுக்க விரும்பியவர் இன்று சமாதான முயற்சியை எதிர்க்கிறார்

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணநாயக்கா சண்டே லீடருக்கு வழங்கிய பேட்டி.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சி பற்றிய தனது கருத்துக்களை ஒன்றுக் கொன்று முரண்பட்ட விதமாக வெளியிட்டு வருகிறார். எமது நாட்டில் சமாதானம்பற்றி எதிர்க் கருத்துக்களையும்வெளிநாடுகளில் அவைகளுக்கு மாறான கருத்துக்களையும் அவர் கூறி வருகிறார்.

இப்படிப்பட்டவருடன் இணைந்து செயற்படுவதென்றால் அது ஐ.தே. முன்னணி அரசிற்கு மிகவும்கடினமான ஒரு முயற்சி எனினும்,பொ.ஐ. முன்னணியின் ஏனைய உறுப்பினர்களைச் சேர்த்து எமது அரசால் செயற்பட இயலும்.

அவரது முரண்பட்ட பேச்சுக்கள் அவர் விடயத்தில் என்னை ஏமாற்றி விட்டது. அவர் என்னதான் பேசினாலும் எமதுசமாதான முயற்சி தொடரும். பொதுமக்களின் ஆதரவு எமக்கு உள்ளதால் இம்முயற்சிக்கு எத்தகைய தடைகளும் ஏற்படாது.

இவ்வாறு வர்த்தகம், நுகர்வோர் பாவனைப் பொருள் விவகார அமைச்சர் ரவிகருணநாயக்கா மே 15ஆம் திகதி சண்டேலீடருக்கு வழங்கியுள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தமிழில் : **கபிலர்**

அப்பேட்டியினை முழுமையாக இங்கு தருகின்றோம்.

கேள்வி

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க தனது மேதின உரையில் ஐ.தே.முன்னணி அரசு ஒழுங்கற்ற முறையில் விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தத்தில் பிரவேசித்துள்ளது.என்று குறிப்பிட்டுள்ளார். இந்த நாட்டின் தலைவியின் இந்தப் பேச்சு அரசாங்கத்திற்கு குழப்பத்தை ஏற்படுத்துமா? அதேவேளை இப் பேச்சு சமாதான முயற்சியை மூழ்கடிக்கும் என்று கருதுகிறீர்களா?

பதில்

ஒழுங்கற்ற விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஒருவரே இப்படிக் கூறுவார் என்று நான் கருதுகிறேன். எத்தகைய ஒப்பந்தமும் செய்யாமல் பிரபாகரனிடம் நாட்டை 10 வருடங்களுக்கு கொடுக்க விரும்பிய ஒருவர் அவர். 'நாய்கள்குரைக்கட்டும் நான் விரும்பியஎதையும் செய்வேன்' என்று முழங்கியவரும் அவர்தான்.

> அவருடைய தந்தை நாட்டின் கட்டமைப்பை உருக்குலைத்தார். தாயார் பொருளாதாரத்தை அழித்தார். சந்திரிகா குமாரதுங்க இந்த இரண்டையும் செய்கிறார். எனவே நாம் எப்படி அவருடன் பணி செய்வது.

சமாதானத்தை மலர்விக்க இந் நாட்டு மக்கள் எமக்கு சட்ட பூர்வமாக வாக்களித்து எம்மை அதிகாரத்தில் அமர்த்தினார்கள் அவர்களின் கருத்தை நாம் ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவர் இப்படிக் கூறுகிறார். அவரின்இந்தப் பேச்சுகுறித்து ஐ.தே.முன்னணி அரசு குழப்பம் அடையமாட்டாது.இதை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளாது என்றுதான் நான் கூறுவேன்.

கேள்வி

சமாதான முயற்சி பற்றி பிரதான எதிர்க்கட்சியான பொ.ஐ முன்னணி இரண்டு பிரிவுகளாக உள்ளது. ஒரு பிரிவு சமாதான முயற்சியை ஆதரித்தும்,மற்றப் பிரிவு எதிர்த்தும் கருத்துக்களைக் கூறுகின்றன. எனவே தேசிய பிரச்சினையைத்தீர்த்து வைப்பதற்கான அவசியமான நிகழ்ச்சித் திட்டங்கள் சிலவற்றை நிறைவேற்றுவதற்கு இது வாய்ப்பானநேரம்என்று கருதுகிறீர்களா? அதேவேளை பொ.ஐ முன்னணிக்குள் ஏற்பட்டுள்ள பிளவு பற்றி கருத்துக் கூறுவீர்களா?

பதில்:

பொ.ஐ.முன்னணி எப்போதுமே இரு உலகங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. சந்திரிகா குமாரதுங்கவை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். அவர் இன்று ஒரு விதமாக இருப்பார். நாளைக்கு இன்னொரு விதமாக இருப்பார்.

அவர் ஒரு புறத்தில் சமாதானம் பற்றிப் பேசுகிறார். மறுபுறத்தில் யுத்தம் குறித்துப் பேசுகிறார். எனவே சமாதானம் குறித்து அவர்களிடையே ஏற்பட்டுள்ள பிளவு ஆச்சரியத்திற்குரிய விடயமல்ல. இந் நிலையில் பொ.ஐ.மு. ஆதரவு அளித்தாலென்ன, ஆதரவு அளிக்காமல் அவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு இருந்தாலென்ன, அரசு சரியான நிகழ்ச்சித் திட்டங்களுடன் நேராகச் சென்று கொண்டுதான் இருக்கிறது.

கேள்வி:

ஜனாதிபதி மீதான அரசியல் குற்றப் பிரேரணை குறித்து ஐ.தே. முன்னணிக்கு ஆர்வம் குறைந்து விட்டது போல் தெரிகிறது. ஏனெனில் அரசு வேறு விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறது என்று கூறலாமா?

பதில்:

நாங்கள் எதைச் சொல்கிறோமோ, அதைச் செய்வோம். அப்படிச் செய்வதே எமது இலட்சியம். இப்போது நாம் பொருளாதார மாற்றத்திற்கு முன்னுரிமை கொடுத்து வருகிறோம்.அடுத்தது வேலையில்லாப் பிரச்சினை பற்றியும் சமாதான முயற்சி பற்றியும் நிச்சயமாக சிந்திப்போம்.

நாங்கள் முன்பு கூறியது போல் பிரதம நீதியரசர், ஜனாதிபதி ஆகியோர் மீதான அரசியல் குற்றப் பிரேரணைக்கான சாத்தியப்பாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நாட்டைப் பாதுகாப்பதற்கான கருதுகோளின்படி இது செய்யப்படும். நாங்கள் தனிப்பட்டவர்களை இலக்காக வைத்துச் செயற்படவில்லை.

கேள்வி:

ஜனாதிபதிக்கு இருக்கும் சட்ட பூர்வமான அதிகாரங்களின்படி ஒருவருடத்தின் பின் பாராளுமன்றத்தை அவர் கலைக்க முடியும். அதைத் தடுப்பதற்கு தாங்கள் என்ன திட்டத்தை வைத்திருக்கிறீர்கள்?

பதில்:

ஜனாதிபதி அத்தகைய ஓர் அதிகாரத்தை வைத்திருக்கிறார். ஆனால் கடந்த 4 மாதங்களுள் நாட்டிற்கு எம்மால் என்ன செய்ய இயலும் என்பதைக் காட்டியுள்ளோம். ஒரு வீதத்திற்கும் குறைந்த அளவில் இறந்த நிலையில் கிடந்த பொருளாதாரத்தைக் கையேற்றோம், வேலையில்லாப் பிரச்சினை, யுத்தம் ஆகியவற்றையும் கையேற்றோம், கடின உழைப்பு, தியாகங்கள் ஆகியவற்றின் மூலம் கஷ்டங்கள் நிறைந்த சூழ்நிலையை இன்று கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளோம்.

கேள்வி

ஜே. வி.பி.சிஹள உறுமய, பொ. ஐ. முன்னணியின் ஒரு பகுதியினர். யுத்த நிறுத்த உடன்படிக்கையை கண்டிப்பதற்கு கட்டம் கட்டமாகஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தியுள்ளனர். இவை எவ்வகையில் சமாதான முயற்சிக்கு எதிரான பாரிய நடவடிக்கைகளாக அமையும்?

பதில்

உள்ளூராட்சி தேர்தலின் பின் ஜே. வி. பிக்கு நாட்டில் உள்ள பலத்திலும் பார்க்க பாராளுமன்றத்தில் உள்ள பலம் பெரிதாகத் தெரிகின்றது. அக்கட்சி அரசாங்கத்தின் மீதான எதிர்ப்பை மக்களிடம் கொண்டு செல்லும் போது யுத்தம் வேண்டுமா? சமாதானம் வேண்டுமா என்னும் இரு விடயங்கள் அவர்கள் தெரிவு செய்வதற்காக முன் வைக்கப்படுகின்றன.

நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைக்காது சமாதானத்தைக் காணமுடியும் என்று அவர்கள் கருதினால் எனது கருத்துப்படி அவர்கள் அரசாங்கத்தை ஆதரிக்கலாம். ஆனால் பொறுப்புணர்வற்ற பிரதிநிதிகளாக தவறான கருத்துக்களைச் சொல்வது சமாதானத்தை விரும்பும் மக்களிடையே பீதியை ஏற்படுத்தும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

பிரதமர்ரணில் விக்கிரமசிங்காவினால் வழி நடத்தப்படும் ஐ. தே. முன்னணிஅரசுஎத்தகைய விலை கொடுத்தும் சமாதானத்தை அடைய வேண்டும் என்று முயற்சிக்க மாட்டாது.

தேசிய ஒருமைப்பாட்டின் கட்டமைப்புஎன்றும் மதிக்கப் படும்பேணப்படும்.மக்கள் இது பற்றி கவலைப்படத் தேவையில்லை. எனவே இந்த அடிப்படையில் எதிர்ப்பணியினரின் நடவடிக்கைகள் பெரியஎதிர்ப்பாக எமக்குப்படவில்லை. நல்ல அரசாட்சிக்கு பொது மக்களின் ஆதரவு அவசியம் அது எமக்கு இருக்கிறது.

(தொடரும்)

## தினசரி தியானம்

### கர்ப்பக்கிருகம்

ஈனந் தருநாடு இதுநமக்கு வேண்டாவென்று
ஆனந்த நாட்டில் அவதரிப்ப தெந்நாளோ?

- தாயுமானவர்

பிரகாரங்களை யெல்லாம் தாண்டிக்கர்ப்பக்கிருகத்துக்குள் வந்தால் தானே கடவுளே, உன்னை நான் காணமுடியும்.

பொறிகள் வாயிலாகப் புறவுலகத்தில் போவதெல்லாம் பாழ். ஆங்குள்ள கூச்சல் நிறைந்த களியாட்டமும் குழப்பம் நிறைந்த போராட்டமும் துன்பத்தைத் தருகின்றன. ஆற்றலை அழித்துவிடுகின்றன. உள்முகமாகத் திரும்பி மனத்தின் உள்ளே கர்ப்பக்கிருகத்துக்குப் போகும் பொழுது புத்துயிர் வருகிறது. உள்ளே உள்ள அமைதி ஆனந்தத்தைக் கொடுக்கிறது. ஆறுதல் அடைதற்கு உற்ற இடம் மனது என்னும் கர்ப்பக்கிருகம்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# உறுதிப்படுத்தல் இன்றி மீளக்குடியமர்வோர்க்கு நிவாரணம் வழங்க சிரமம்

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் மீளக் குடியமர வரும் பொது மக்கள் அதனைஉறுதி செய்யும் கடிதங்களை வன்னியில் தாங்கள் தங்கியிருந்த பிரிவு கிராமசேவையாளரிடம் பெற்று வராமையினால்,

அவர்களுக்கு இங்கு நிவாரணங்கள் வழங்குவதில் சிரமங்கள் ஏற்பட்டு வருவதாகவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை உரிய உறுதிப்படுத்தல் இன்றி நிவாரணம் பெற விண்ணப்பிக்கமுடியாது எனவும் மீளக்குடியமர வந்துள்ள மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

(உ-10)



கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கம் அண்மையில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை,டாக்டர் வை. தியாகராஜா ஆகியோருக்கு விருது வழங்கிக் கௌரவித்தபோது பிடிக்கப்பட்ட படம். படத்தில் சங்கத் தலைவர் தனேந்திரன் உரையாற்றுவதையும் காணலாம்.

### தென்னிலங்கையில்...

தடைகளும், சோதனை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள தமிழர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்வதற்கு வழங்கப்படும் படிவத்தை பதிய வேண்டியது அவ்வளவு அவசியமில்லை. இது தொடர்பாகவும் ஒருவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

(ம)

### சமாதான முயற்சிகள்..

கும் இடையே ஏற்பட்டுள்ள சமாதான உடன்படிக்கையினால் யுத்தத்திற்கு செலவிடும் பணம் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது..

இந்தப்பணம் நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் இச் சமாதானச் சூழ்நிலைதொடர்ந்து நீடிப்பதற்கு ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

(வ-

### இந்தியா...

இதேவேளை காஷ்மீர் தலைநகரான ஸ்ரீநகரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 16 பேர் காயமடைந்தனர்.

காஷ்மீரில் கடந்த செவ்வாய்க்கிழமை தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 34 பேர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(த-7)

## 3 எலும்புக் கூடுகளை பொலிசார் மீட்டனர்

(கொழும்பு)

தென்பகுதிகளில் மூன்று வெவ்வேறு இடங்களில் மூன்று எலும்புக்கூடுகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட மூன்று எலும்புக்கூடுகளில் ஒன்று இளம் பெண்ணினுடையது என்றும், அதற்கருகில் பெண்கள் அணியும் உடுப்புகள் கிடக்கக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெப்பிட்டி கொல்லாவப் பகுதியிலிலும், பதில்கும்புர பகுதியிலும் பிதிகலப் பகுதியிலுமே இம் மூன்று எலும்புக் கூடுகளும் உருக்குலைந்த நிலையில் பொலிசாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மூன்று எலும்புக் கூடுகளையும் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைத்த பொலிசார் மேற்கொண்டு விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

(ம)

### காலை 8முதல்...

இருப்பதனால் காலை 8 மணி முதல் மாலை 5 மணி [illegible] போக்குவரத்திற்காக பாதை திறக்கப்பட்டிருக்கும் என்று பலாலி ஊடகப்பிரிவினர் நேர மாற்றம குறித்து வெளியிட்ட பத்திரிகைக்குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே காலை 6 மணி முதல் மாலை 5 மணிவரை பயணத்தை மேற்கொள்ள முடியும் என தாம் விடுத்த அறிவித்தலுக்காக படைத்தரப்பு வருத்தம் தெரிவித்துள்ளது

(இ)

### பொது இடங்களில்...

படையினர் தங்கியுள்ள 64 கட்டடங்களுக்குரிய கோவைகள் இருக்கின்றபோதிலும் அநேகமான கோவைகள் உரிய ஆவணங்கள் இல்லாததினால் அக் கட்டடங்களுக்குரிய வாட்கைகளை உரிமையாளர்களுக்கு செலுத்த முடியவில்லை.

இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு பல கடிதங்கள் அனுப்பப்பட்டும் கட்டடங்கள் தொடர்பான ஆவணங்கள் அனுப்பிவைக்கப்படவில்லை. எனவே இந்தப் பிரச்சினை தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் உட்பட நூற்றுக்கும் அதிகமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

(த)

## 72வெற்றிடங்களுக்கு 10ஆயிரம்விண்ணப்பங்கள் அனுப்பிவைப்பு

(திருமலை)

அரச சேவைகள் லிகிதர் சேவைக்கு சுமார் பத்தாயிரம் பேர் விண்ணப்பம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த லிகிதர் சேவைக்கு தற்போது 72 வெற்றிடங்கள் மட்டுமே இருப்பதாகவும், அதற்கு பத்தாயிரம் இளைஞர்கள், யுவதிகள் விண்ணப்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

## புரிந்துணர்வு...

சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹேய்ம் ஆகியோரின் சந்திப்பு இடம்பெற உள்ளது.

அரச தரப்பின் முக்கிய தலைவர்கள் அண்மைக்காலமாக விடுதலைப் புலிகளின் தாயகக் கோட்பாட்டை ஏற்க முடியாது என்றும், இறைமையுள்ள ஒற்றையாட்சியின் கீழான தீர்வு என்று கூறிவருவது சம்பந்தமாகவும் விடுதலைப்புலிகள் தமது அதிருப்தியையும் வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளுடன் சுமூகமான பேச்சு வார்த்தையை திட்டமிட்டபடி யூன் மாதத்தில் தாய்லாந்தில் நடத்துவதற்கு வசதியாக விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு அரசு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளமுடியாத நிலையில்தாய்லாந்துப் பேச்சுவார்த்தை திட்டமிட்டபடி நடைபெறுமா என்ற சந்தேகம் சமாதானத்தை விரும்பும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளதாக கொழும்பில் உள்ள நோர்வே தூதரகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகளின் தலைவர்களும், யுத்தநிறுத்த கண்காணிப்பு குழு உறுப்பினர்களும் சந்தித்து பேசிய போது லண்டனில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர், அன்ரன் பாலசிங்கத்துடன் முக்கியமான சந்திப்பு ஒன்று நடைபெறவிருப்பதாக சூசகமாக தெரிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழ்க் குழுக்களிடமிருந்து முழுமையாக ஆயுதங்களைகளையாத நிலையிலும், பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் நிலைகொண்டுள்ள இராணுவம் வெளியேறாத நிலையிலும், ஏ.9 கண்டி வீதியூடான போக் குவரத்தில் காணப்பட்டுவரும் நடைமுறைச்சிக்கல் நீக்கப்படாத நிலையிலும் இச்சந்திப்பு முக்கியத்துவம் பெறுவதாக மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

(ம)



கோண்டாவில்இந்து மகா வித்தியாலயத்திற்கு காணி கொள்வனவு செய்வதற்கான காசோலையை லண்டனில் உள்ள கோண்டாவில் நலன் புரிக்கழக பொருளாளர் சி.ஸ்ரீஸ்கந்தராசா வித்தியாலய அதிபர் செல்வி பா.மார்க்கண்டுவிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

## புலிகளின் மீதான தடையை நீக்கவும்

### சித்தார்த்தன் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை அரசு உடனடியாக நீக்கவேண்டும் என்று புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தடை சமாதான முன்னெடுப்புக்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது விடுதலைப்புலிகளின்மீதான தடை நீக்கம் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கடைப்பிடிக்கும் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

(வ.5)


# PUBLIC LECTURE

Centre Policy Alternatives (Colombo) in collaboration with the Departments of History and Surgery, University of Jaffna presents a public Lecture on

**Peace Process: Challenges and Opportunities**

**Speaker**

Prof. Nicholas Hayson
University of Witwatersrand,
South Africa.
(Legal adviser to Nelson Mandala,
Former President of South Africa)

Date : 19th of May 2002.(Sunday)
Time : 3.00 p.m.
Venue : Library Auditorium
University of Jaffna

All are welcome.

Dr. D.C.Ambalavanar, Dept. of Surgery.
Prof. S.K. Sitrampalam, Dept. of History

(5316)



## அன்பான வேண்டுகோள்

லாலா சோப், சண்சயின் சோப் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு எமது வன்னி மண்ணில் உள்ள மக்கள் மிகவும் உறுதுணையானவர்கள். எமது உற்பத்தியை பல ஆண்டுகளுக்குப் பிறகு பெரும் சிரமத்தின் மத்தியில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்த முன்வந்துள்ளோம். தொடர்ந்தும் எமது கைத்தொழில் உற்பத்திக்கு முழு ஆதரவும் ஒத்துழைப்பும் தருவீர்களானால் லாலா சோப், சண்சயின் சோப் என்பவற்றை மீண்டும் எமது வன்னி மண்ணில் முன்னிலைக்கு கொண்டுவர முடியும் என்பதையும் வறுமைக் கோட்டில் வாழும் பலருக்கு வேலை வாய்ப்பினையும் வழங்க முடியும் என்பதையும் அறியத்தருகிறோம்.

லாலா அச்சுவேலி

(C/4270)









## உடன் தேவை

எமது பத்திரிகை அலுவலகத்தில் பகலில் முழுநேரம் தங்கியிருந்து கடமையாற்றக்கூடிய

### விளம்பர முகவர்

உடன் தேவை:

தகுதி: உடல் ஆரோக்கியம் உடையவராக இருப்பதுடன் மும்மொழிகளிலும் சரளமாகப் பேசும் ஆற்றல் உடையவராகவும் இருப்பதுடன் 40வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதியானவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

வலம்புரி
15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்

நிர்வாக
உத்தியோகத்தர்


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.